www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR12T

# விருதுநகர் மாவட்டம்

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

வகுப்பு – 12

காலம் 1:30 பொதுத் தமிழ் மதிப்பெண்கள் - 50

### பகுதி - I

பலவுள் தெரிக. 10 X 1 = 10

1. "ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம் மௌனம்.மகா மௌனம் " - அடிகள் புலப்படுத்துவது அ) நிறைகுடம் நீர் தழும்பல் இல்
ஆ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.
இ) குறைகுடம் கூத்தாடும். ஈ) இரைச்சல்

2. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) சேய்மைக் காட்சித் துணிப்பு ஆ) அண்மைக் காட்சித் துணிப்பு
இ) காட்சி மறைவு ஈ) நடுக்காட்சித் துணிப்பு

3. அல்லல் படுப்பதூஉம் இல்- எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

4. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) அச்சம் ஆ) புகழ் இ) பெருமிதம் ஈ) நம்பிக்கை

5. யானை புக்க புலம் போல உவமைக்குப் பொருத்தமான தொடர் .
அ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்.
ஆ) தனக்கும் பயன்படாது. பிறருக்கும் பயன்படாது.
இ) தனக்குப் பயன்படும் ,பிறருக்குப் பயன்படாது.
ஈ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது.

6. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது.
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.
அ) கூற்று 1சரி ,கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

7. தொன்மம் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்க.
அ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.
ஆ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள், செய்திகள்.
இ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது .
ஈ) உருவாக்கப்பட்டு இறுதி விட்ட வடிவங்கள்.

8. ஆராய்ந்து சொல்கிறவர் அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர் ஈ) உறவினர்

9. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் - என்ற நூலின் ஆசிரியர்
அ) புதுமைப்பித்தன் ஆ) சிவாஜி கணேசன்
இ) தமிழண்ணன் ஈ ) காசிராஜன்

10. வெகுளி - என்பதன் இலக்கணக் குறிப்பு.
அ) பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) தொழிற்பெயர்

### பகுதி - II

குறுவினா . ( எவையேனும் நான்கனுக்கு விடையளி) 4 x 2 = 8

11. ஒருமுக எழினி, பொருமுக எழினி -குறிப்பு எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் ? சான்று .
13. மனதை அதன்போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவர் கூறுவது ஏன்?
14. பருவத்தே பயிர் செய். நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
15. அறிவுடைவேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

## பகுதி – III

4 x 2 = 8

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க. (மொழிப்பயிற்சி, இலக்கணம்)**

16. *பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.* திண்மை - திண்மை
17. *கீழ்க்காணும் தொடரில் அடைப்புக்குள் உள்ள* பெயர்ச்சொல்லைத் தொடருக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
முருகன் ______ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
18. Animation - என்பதன் தமிழ்ச்சொல்.
19. தலைக்கோல் - என்ற சொல்லிற்கான புணர்ச்சி விதி தருக.
20. *தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
21. *கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.*
குழந்தை , நட , தளிர்நடை , விழு

## பகுதி - IV

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 x 4 = 8

22. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
23. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
24. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?
25. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்
- *இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.*

## பகுதி - V

2 x 6 = 12

**பின்வருவனவற்றிற்கு விரிவான விடையளி.**

26. அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக. **(அல்லது)**
ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.
27. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

## பகுதி - VI

1 X 4 = 4

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

28. "காய்நெல் அறுத்து " - எனத் தொடங்கும் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல்.

------



www.Padasalai.Net